# அகதிகளைத் தடுப்பதில் கடற்படையினர் தீவிரம்!

RECEIVED 1990-7-17 Periodicals Division

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஆடி: 1 துல் ஹஜ்ஜா: பிறை: 23 இதழ்: 148

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 17-07-1990

## இந்தியாவின் உதவி கோரப்படுகிறது!

[சென்னை)

''இலங்கையின் வடக்கு-கிழக்கிலிருந்து பாக்குநீரிணை ஊடாக தமிழகம் வந்துசேரும் அகதிகளைத் தடுத்துநிறுத்த இலங்கைக் கடற்படையினர் கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனால்மக்கள் பல இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர். இதிலிருந்து அவர்களைக் காப்பாற்றி தமிழகம் வந்துசேர இந்தியா துணைபுரிய வேண்டுமென்று ஏற்கனவே வந்து சேர்ந்த அகதிகள் தெரிவித்துள்ளனர்'' என்று அகதிகள் மறுவாழ்வுக்கான அதிகாரி திரு. ராமதாஸ் தெரிவித்துள்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் காணப்பட்ட பீரங்கிப் படகுகள் காரைநகர் நகர்ந்தன!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை, வடமராட்சி கடற்பகுதில் நிறுத்தப்பட்டிருந்த பீரங்கிப் படகுகள் பல காரைநகர், மாதகல் கடற்பகுதிக்கு நகர்ந்துள்ளன. கடந்த வாரம் வடமராட்

[4-ம் பக்கம் பார்க்க]

# கடும் தாக்குதல்களை நடத்த வடக்குநோக்கி 4000 படைகள்!

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் கடும் தாக்குதல் நடத்த மேலும் 4 ஆயிரத்துக்கும் அதிகமான துருப்புக்கள் அங்கு அனுப்பப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது பாதுகாப்புப் படையினர் கடும் தாக்குதலை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது என்றும், அதற்கு துணை

[4-ம் பக்கம் பார்க்க]

## பாரிய அகதிமுகாம்!

(சென்னை)

இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கென மதுரையில் 124 ஏக்கர் நிலத்தில் பாரிய அகதிமுகாம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

இத்தகவலை தமிழ்நாடு அகதிகள் ஒருங்கிணைப்புகுழு அதிகாரி திரு. ராம்தாஸ்தெரிவித்தார்.

நேற்றுவரை தமிழ்நாட்டிற்கு 21. 513 அகதிகள் வந்திருப்பதாகவும் இவர்கள் உடனுக்குடன் அகதிமுகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## மன்னாரில் 40,000 மக்கள் நீர், உணவின்றி பட்டினியால் தவிப்பு

(மானிப்பாய்)

மன்னார் மாவட்டத்தில் சுமார் 40,000க்கு மேற்பட்ட மக்கள் உண்ண உணவின்றி நீரின்றி பட்டினியால் வாடும் அவல நிலைபற்றி தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி அங்கிருந்து வந்த ஓர் அரசாங்க ஊழியர் தெரிவிக்கையில் கடந்த ஒரு மாதகாலமாக அங்கு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினு

[4-ம் பக்கம் பார்க்க]

# ராணுவ தரப்பில் 700பேர் பலி 2000பொதுமக்கள்மாண்டனர்

## ஏஜன்சி செய்தி நிறுவனம் தகவல்

[சிட்னி]

இலங்கையின் வடக்கு-கிழக்கில் தொடர்ந்தும் நடைபெற்றுவரும் யுத்தத்தில் இலங்கை இராணுவ தரப்பில் சுமார் 700 பேர்வரை கொல்லப்பட்டும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துமிருந்துமிருப்பதாக ஒரு நிலை செய்திகளை ஆதாரம் காட்டி ஏஜென்ஸி செய்திஒன்று தெரிவித்துள்ளது.

"கடந்த ஒரு மாதத்திற்கு மேலான இந்த யுத்தத்தில், 2000 ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டும் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தும் பலலட்சம் பேர் வீடு வாசல்களை இழந்தும் அகதிகளாகியுள்ளனர்.

வடபகுதியில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மக்கள் பட்டினி நிலையை

(4ம் பக்கம் பார்க்க)

## விடத்தல்தீவில் ஒரு குடம் தண்ணீர் ஒரு ரூபா!

(மன்னார்)

விடத்தல் தீவில் ஒரு இடம் தண்ணீர் ஒரு ரூபாவிற்கு விற்பனைசெய்யப்பட்டு வருகிறது.

திருகோணமலை, யாழ்ப்பாணம் உட்பட பல பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்து சென்றவர்கள் காரணமாக விடத்தல்தீவில் மக்கள் தொகை அதிகரித்ததாலே இவ்வாறு தண்ணீர் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

## பெற்ற பிள்ளையை விற்ற அன்னை

[மானிப்பாய்]

பசியின் கொடுமை தாங்காது தனது 4 மாத பிள்ளையை விற்ருள் ஒரு அன்னை!

இச்சம்பவம் மன்னார் மாவட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

இம்மாவட்டத்தில் தற்போது நடைபெற்றுவரும் யுத்தத்தினல் கணவனை இழந்து இடம் பெயர்ந்து அகதிகளாக இருக்கும் ஒரு தாயானவள் தன்னையும் தனது மற்றைய மூன்று பிள்ளைகளையும் பசியின் கொடுமையிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த தனது நாலுமாத பச்சிளம் பாலகனை 1200 ரூபாவுக்கு விற்று தற்போது இந்தியாவுக்குச் சென்றுள்ளாரென்று தெரிவிக்கப்படுகிறது. (71)

## இந்தியா செல்வதற்கு ஆறுயிரம் அகதிகள் விடத்தல்தீவில் தஞ்சம்!

(மன்னார்)

விடத்தல்தீவில் இந்தியா செல்வதற்காக தங்கியிருக்கும் மக்களின் தொகை அதிகரித்து வருகிறது.

இதுவரையும் ஆறுயிரத்திற்கு அதிகமான மக்கள் தங்கியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம், திருகோண

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மாணவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து தென்மராட்சியில் ஊர்வலம்

(நாவற்குழி)

தமிழ் மாணவர் மீது இலங்கை அரசு நடத்தும் தாக்குதலைக் கண்டித்து தென்மராட்சி மாணவர்கள் நாளை பதினெட்டாம் திகதி ஆர்ப்பாட்ட ஊர்வல மொன்றை சாவச்சேரியில் நடத்தவுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

# இரண்டொரு மாதங்களில் யுத்தம் முடிந்துவிடுமாம்!

## ரஞ்சனின் புதிய மதிப்பீடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்குமிடையே நடந்துவரும் யுத்தம் இன்னும்இரண்டு ஒரு மாதங்களில்முடிந்துவிடும் என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தோட்டப் பகுதிகளிலிருந்து ஆயிரம்பேர் இலங்கை அரச படைகளில் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கின்றனர் என்றும் அமைச்சர் திரு. ரஞ்சன் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## குஜ்ரால் ராஜினமா

(சென்னை)

புதுடில்லியில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து ஏற்கனவே பதவி ராஜினமாச் செய்த ஒன்பது அமைச்சர்களுடன் வெளியுறவு அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் உட்பட மேலும் நான்கு அமைச்சர்கள் பதவி ராஜினமாச் செய்துள்ளனர்.

மொத்தமாகப் பதவி விலகிய அமைச்சர்களின் எண்ணிக்கை 13ஆக உயர்ந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "போராட்டத்திற்கு எமது இளைஞரின் பங்களிப்பு குறைவாகவே இருக்கிறது"

## தென்மராட்சிப் பொறுப்பாளர் தினேஷ் கவலை

(நாவற்குழி)

"எமது போராட்டத்திற்கு இளைஞர்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது. இந்நிலைமாறி எமது இளைஞர்களின் பங்களிப்பு உடன் அதிகரிக்கப்படவேண்டும்."

இவ்வாறு தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு. தினேஸ் தென்மராட்சி வட்டஅவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திரு. பாலசிங்கம் தலைமையில் தென்மராட்சி அரசியல் பிரிவு அலுவலக மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தென்மராட்சி அரசுயல் பொறுப்பாளர் திரு. பாப்பா பேசுகையில் "தமிழீழப் பிரகடனம் செய்ய பேச்சுவார்த்தை தேவையில்லை யுத்தமே ஒருவழி" இதற்குத் தேவையான ஆட்பலம், நிதிப்பலம் என்பவற்றை நாம் அதிகரிக்கவேண்டும் என்றார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

யாழ். குடாநாட்டை எமது சுய ஆதிக்கததின்கீழ்கொண்டுவர முனையும்போது எதிரியின் கடைசிப்பலம் முற்றுமுழுதாக பிரயோகிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்நிலையைச் சமாளித்து வெற்றியடைய வேண்டுமெனில் எமது பலத்தை அதிகரிக்கவேண்டும்" என்றார். (107)

## தீவுப்பகுதிக்கு மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதிக்கான மின்சாரம் கடந்த புதன்கிழமை முதல் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதிக்கான மின்சாரம் கடந்த மாதம் 12ம் திகதி முதல் தடைப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பனிப்புலம் முத்துமாரி அம்பாள் வருடாந்த மஹோற்சவம் கடந்த 13ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இம்மாதம் 24ம் திகதி தேர்த்திருவிழாவும், 25ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## இடம்பெயர்ந்த மக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து புங்குடுதீவு சென்றவர்கள் அங்கு உணவுப் பொருட்கள் பெறமுடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

போக்குவரத்து வசதிகள் இல்லாததினால் யாழ். நகர் வந்து உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லமுடியாதநிலையில் உள்ளனர். குடிநீருக்கும் அங்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## துணிகள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கிழக்கில் பெண்கள் குழுக்கள் வீடு வீடாகச் சென்று அகதிகளுக்கு வழங்குவதற்காக உடுப்புக்கள், துணிவகைகளைத் திரட்டி வருகின்றனர். அகதிக் குடும்பங்களுக்கு உதவுவதில் இக்கிராம மக்கள் தமது பங்களிப்பை ஆர்வத்துடன் செய்துவருகின்றனர். (54)

## அகதிகளுக்கு துணிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியிலுள்ள சென். மேரிஸ் சமூக அபிருத்திச் சபை, யாழ். நகருக்கு வெளி மாவட்டங்களிலிருந்து அகதிகளாக வந்துள்ள மக்களுக்கு உடுபுடவைகள் அடங்கிய பொதிகளை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

சென். மேரிஸ் சமூக அபிவிருத்திச் சபை நிர்வாகிகள் பெறுமதிவாய்ந்த உடுபுடவைகள் அடங்கிய 100 பொதிகளை யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. கே, சபாபதிப்பிள்ளையிடம், யாழ்ப்பாணம் சென். சார்ள்ஸ் மகா வித்தியாலயத்தில் வைத்து வைபவ ரீதியாகக் கையளித்தனர்.

மேற்படி மகாவித்தியாலயத்தில் தங்கியிருக்கும் வெளி மாவட்ட அகதிகளுக்கு, அப்பகுதிக் கிராம சேவையாளர் திரு. கே. சொக்கலிங்கம், முதலாவது பொதியை வழங்கி இந்நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். (வி)

## பதுங்குகுழி வெட்ட உதவுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துச் சனசமூக நிலையங்களும் தத்தமதுபகுதிமக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு 'பதுங்கு குழிகள்' வெட்டிக்கொடுத்து உதவுமாறு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளன நிர்வாகச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா சகல சனசமூக நிலையங்களையும் கோரியுள்ளார்.

கிராமந்தோறும் முதலுதவிச் சிகிச்சைப் பயிற்சிகளைச் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் இயக்கத்தினருடன் இணைந்து நடாத்தும்படியும், இரத்த தானம் செய்ய விரும்புவோரை திரட்டி மக்களை உயிரழிவிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் தனது வேண்டுகோளில் கேட்டுக்கொண்டுள்ளார்.

சகல சனசமூக நிலைய உறுப்பினர்களும் அகதிமுகாம்களுக்கு நேரில்சென்று சேவை புரியுமாறும் கோரப்பட்டுள்ளனர். (54)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான காலகட்டத்தில் பொதுமக்கள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிய கருத் ரங்கொன்று நேற்று முன்தினம் பண்டியன் தாழ்வு சந்தனமாதா தேவாலயத்தின் முன்புள்ள விளையாட்டுக் கழக மைதானத்தில் பாஷையூர் சிற்றூர் அவை அங்கத்தவர் திரு. எஸ். திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் சிற்றூர் அவைத் தலைவர் திரு. கே. சச்சிதானந்தசிவம், அரியாலை-கொழும்புத்துறை பகுதி வீடு தலைப்புலி இயக்கப் பொறுப்பாளர் திரு. பகீர் உட்பட பலரும் உரையாற்றினர்கள். (வி)

## அகதிகளுக்கு உணவுப் பொட்டலங்கள்

(நாவற்குழி)

திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து வந்து நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் குடியேறியுள்ள அகதிகளுக்கு தச்சன்தோப்பு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தினர் 75 மதிய போசன பொட்டலங்களை அவ்வூர் மக்களிடமிருந்து சேகரித்து கொடுத்துள்ளனர்.

இதேபோல் தினமும் நாவற்குழிப் பகுதியில் உள்ள சனசமூக நிலயங்கள் மதிய போசனப் பொட்டலங்களை சேகரித்து அவர்களுக்கு உதவி வருகின்றது. (107)

## விஷக்கடி வைத்தியம்

(வேலணை)

யாழ்ப்பாணம் கொட்டடி விஷக்கடி வைத்தியர் திரு. மு. க. சிற்றம்பலம் தற்பொழுது வேலணையில் உள்ள ஆலம்புலம் என்ற இடத்திலிருந்து இலவச விஷக்கடி வைத்தியத்தைச்செய்து வருகின்றார்.

## ஆணையாளருக்கு வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர ஆணையாளராகத் திரு எஸ். பி. பாலசிங்கம் பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியானதை முன்னிட்டு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை நேரில் வாழ்த்துத் தெரிவித்துள்ளது

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு வே. கெ. தனபாலன் தலைமையில் பேரவைச் செயலாளர் திரு. இ. தவகோயில், தொண்டர் சேவை ஆணையாளர் திரு, இ. சுவாமிநான் ஆகியோர் கொண்ட குழு யாழ். மாநகர ஆணையாளரை அவரது அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்தையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டது (54)

## சம்பள முற்பணம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத் தாக்குதல் காரணமாக வவுனியா மாவட்டத்திலிருந்து அகதிகளாக வந்த வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்கள ஊழியர்களுக்கும் ஆயிரம் ரூபா சம்பள முற்பணம் வழங்கப்பட்டது.

யாழ். மாவட்ட மது வரித் திணைக்கள உதவி அணையாளர் திரு. ம. மகேந்திரனின் முயற்சியைத் தொடர்ந்து வவுனியா மாவட்ட ஊழியர்களுக்கும் யாழ். மாவட்ட மதுவரித் திணைக்கள ஊழியர்களுக்கும் இச்சம்பள முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. (54)

## காங்கேசன்துறை வங்கிகள் இயங்கவில்லை

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறையில் இயங்கிவந்த இரு வங்கிகளும் செயல்படாமல் இருப்பதால் பொதுமக்கள், வங்கி அலுவல்களை மேற்கொள்ளமுடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறையிலுள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கிக் கிளைகள் தாக்குதல் ஆரம்பமானதில் இருந்து செயல்டாமல் மூடிக்கிடக்கின்றன. திடீரெனத் தாக்குதல் ஆரம்பமானதால் இந்த வங்கிகளின் தஸ்தாவேஜுகளும் வேறு இடத்திற்கு மாற்றப்படவில்லையெனக் கூறப்படுகிறது. (86)

## பனம் உணவுப் பொருள் விற்பனை அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ். குடாநாட்டில் நிலவும் உணவுப் பொருட் தட்டுப்பாட்டைப் போக்கும் முகமாகப் பனை அபிவிருத்திச்சபை பனம் உணவுப் பொருட்களையும், பான வகைகளையும் சபையின் 'கற்பகம்' விற்பனை நிலையங்கள் மூலம் பாவனையாளர்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் நல்லூர், சுன்னாகம், மானிப்பாய், அல்வாய் 'மாலிசந்தி' கிளிநொச்சிக் கற்பககங்களிலும் சாவகச்சேரி நவீன சந்தைக் கட்டிடத்திலுள்ள ரஞ்சித் பனம் பொருள் விற்பனை நிலையத்திலும், சரசாலையிலுள்ள சாவகச்சேரி ஏற்றுமதி உற்பத்திக்கிராம மக்கள் கம்பனி விற்பனை நிலையத்திலும் பனம் உணவுப் பொருட்களான பனம் வெல்லம், பாம்போஷா சத்துணவு, ஒடியல் மா, புழுக்கொடியல் மா, பனம் பானம், பனம் கிரஷ், பனம் பாணி, பனம் கோடியல், பனம் பழச்சாறு, பனுட்டுப் போன்ற பனம் உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

யாழ். மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும், பனை அபிவிருத்திச் சபையிடமிருந்து பனம் வெல்லம், புழுக்கொடியல் மா, ஒடியல் மா ஆகியனவற்றைக் கொள்வனவு செய்து சங்கக் கிளைகள் மூலம் பாவனையாளர்களுக்கு வழங்கி வருகின்றது. இன்றைய சூழ்நிலையில் பனம் உணவுப் பொருள்களுக்கும், பாம்போஷா சத்துணவுக்கும் அமோக 'கிராக்கி' ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து இப்பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளன. (54)

## தமிழ்நாடு சனத்தொகை ஆறரை கோடியாகும்!

(சென்னை)

தமிழ்நாட்டில் தற்போது 5 கோடியாக இருக்கும் சனத்தொகை அடுத்த பத்து வருடகாலத்தில் ஆறரைக் கோடியாக அதிகரிக்கும் என்றும், அதற்கு ஏற்றவகையில் உணவு உற்பத்தியும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று தமிழ்நாடு முதல்வர் திரு மு. கருணாநிதி தெரிவித்தார்.

## சம்பளம் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள பதினேழு நீதிமன்றங்களில் அநேக நீதி மன்ற ஊழியர்கள் தமது யூன் மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத அவல நிலையிலுள்ளனர்.

இவ்வூழியர்களுக்கான சம்பளப்பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு விட்ட போதிலும் வங்கிக் கணக்கில் போதிய பணமிருந்தும் வங்கிகளில் மட்டுப்படுத்தப்பட்ட பணக் கொடுப்பனவினால் சம்பளப்பணம் பெற முடியாதநிலையேற்பட்டுள்ளது. (54)

## தகவல் தாருங்கள்

திருமலை நீர்ப்பாசனத் திணைக்கள ஊழியரான செல்வி அ. நடராசா மற்றும் சி.வி.ரோட்டில் வசிக்கும் இரத்தினலிங்கம் குடும்பத்தினர் பற்றிய தகவலையும், யாழ். அத்தியடி, புதிய வீதி, 48ம் இலக்கத்தைச் சேர்ந்த என். எஸ். கே. இலட்சுமணன் அறிய விரும்புகிறார்.

வவுனியாவில் வசிக்கும் யோசப் கருணாநிதி என்பவரை திருகோணமலையைச் சேர்ந்த திருமதி மார்க்கிரெட் என்பவர் கைதடி இரட்சணிய சேனை இல்லத்திலிருந்து தேடுகின்றார்.

திருமலையைச் சேர்ந்த திருமலை துறைமுக அதிகார சபை மேற்பார்வையாளர் ம. தேவதாஸ், தே. பீற்றர் ஜெனிஸ், தே. புஷ்பம், ராஜன் ஆகியோரை ம. இராசேந்திரம், 14/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்பவர் தேடுகின்றார்.

## மயிலிட்டி ஆஸ்பத்திரி ஊழியர்கள் சம்பளமின்றி சிரமம்

(பண்டத்தரிப்பு)

மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு கடந்த ஜூன் மாதச் சம்பளம் கிடைக்கவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

தபால் போக்குவரத்து இல்லாததாலேயே இவர்களுக்கான சம்பளம் இதுவரை வந்துசேரவில்லை.

இந்த வைத்தியசாலை மூடப்பட்டுள்ளதால் அங்கு கடமையாற்றிய சுமார் 40 ஊழியர்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று தங்கள் வசிப்பிடங்களுக்கு சமீபமாகவுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் தற்காலிகமாக கடமையாற்றி வருகின்றனர்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரின் முன் அனுமதியை பெற்றே இவர்கள் வேறு இடங்களில் கடமையாற்று வருகின்றனர். (72)

## படகுச் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவு - நெடுந்தீவு-அனலைதீவு ஆகியவற்றிற்கான கடல் பாதை சேவைகள் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகள் தோறும் நடைபெற்று வருகின்றன.

எழுவைதீவு - அனலைதீவுக்கான படகுச் சேவை பருத்தியடைப்பு அம்மன் கோவிலில் இருந்து நடைபெற்று வருகின்றது.

## நோயாளருக்கு சீனி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வரும் நோயாளிகளுக்கு அவர்களின் பாவனைக்காக மானிப்பாய் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் கட்டுப்பாட்டு விலையில் சீனி வழங்கிவருகிறது.

நோயாளிதான் என அத்தாட்சிப்படுத்தப்பட்டவர்களுக்கு கடந்த வாரம் ஒருவருக்கு அரைக்கிலோ வீதம் சீனி வழங்கப்பட்டது. (56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளில் நின்று வேடிக்கை பார்க்காமல் விமானங்களைக் கண்டதும்

## பதுங்கு குழிக்குள் செல்லுங்கள்!

யாழ். நகரில் யுத்தவிமானத் தாக்குதல் தொடர்கிறது. கடந்த சனிமாலை நடந்த விமானத் தாக்குதலில் வேடிக்கை பார்க்க வீதிகளில் சென்ற 5 பொதுமக்கள் பலியானுர்கள் 6பேர் காயமடைந்தனர்.

கடந்த சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு பொட்டலம் போடவந்த அவ்ரோ விமானம் மற்றும் பொம்பர்கள் குண்டுவீசிய பின் 5-30 மணிக்குச் சென்றுவிட்டன. இத்தாக்குதலில் சேதமடைந்த வீடுகளைப் பார்க்கவும், புதினம் அறியவும் பதுங்கு குழிகளிலிருந்து வெளியேவந்த மக்கள் வீதிக்கு வந்தனர். கூட்டம்கூடி நின்று கதைத்தனர்.

அச்சமயம் சரியாக 6-05 மணிக்கு மிக உயரத்தில் இருபொம்மர்கள் திடீரெனவந்தன விமானச் சத்தம் கேட்கவில்லை. கச்சேரியடிப்பகுதியில் பொம்மர் விமானம் ஒன்று இரு குண்டுகளை வீசின. வீதியில் சென்ற மக்களுக்கருகில் அக்குண்டுகள் விழுந்து வெடித்தன. அதனுல் 5 பேர் பலியானுர்கள் 6பேர் காயமடைந்தனர்.

மாலை 4-30 மணிக்கு நடந்த தாக்குதலில் புலிப்போராளி ஒருவர் வீரமணமடைந்தார்.

வானத்தில் விமானங்களை கண்டதும் பொதுமக்கள் வீதியில் நின்று வேடிக்கை பார்க்காமல் பதுங்குகுழிக்கு செல்லவேண்டும். பதுங்குகுழிஒன்றுதான் பாதுகாப்பானது.

### 5-வது முறை தாக்குதல்

யாழ். நகரில் மக்கள் நெருக்மாக வாழும் குடிமனைப் பகுதிகளில் 5 தினங்கள் யுத்த விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

இத்தாக்குதல்களில் இருநூற்றுக்கும் மேற்பட்ட வர்த்தக ஸ்தாபனங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள், ஆலயங்கள், கல்லூரிகள் சேதம் அடைந்தன. பல வீடுகள் படுமோசமாக. உருத்தெரியாமல் உடைந்து வீழ்ந்துள்ளன. சில வீடுகள் சிதறி வெடித்துச் சின்னுபின்னமாகித் தரைமட்டமாகின; தவிடுபொடியாகின.

### 30 வீடுகள் சேதம்

கடந்த வெள்ளிக்கிழமை மாலை குருநகர் பகுதியில், குண்டு வீச்சுத் தாக்குதலில் 30 வீடுகள் சேதமடைந்தன. எட்டு வீடுகள் தரைமட்டமாயின.

பொட்டலம் போட வந்த போர் விமானங்கள், கட்டிடங்கள், வீடுகள் நிறைந்த பகுதிகள் எனத் தெட்டத் தெளிவாகத் தெரிந்திருந்தும், வானத்தில் வட்டமிட்டு வந்து குடிசனப் பகுதியில் குண்டு வீசிச் சென்றன.

அந்தப் பயங்கர குண்டு வெடிப்பின் சத்தம், அயல் கிராமங்கள் மட்டுமன்றி ஆனைக்கோட்டைக்கு அப்பாலும் கேட்டுள்ளது. அவ்வளவு சக்திவாய்ந்த குண்டாக இருக்கவேண்டும்.

ஒரே குண்டுவீச்சில். அக்கம் பக்கத்திலுள்ள 15 வீடுகளும் சேதமடைந்தன. மூவர் காயமடைந்தனர்.

ராஜேந்திரா வீதியில் இக்குண்டினுல் நான்கு வீடுகள் தரைமட்டமாகின. அயலில் உள்ள 11 வீடுகளின் கூரைகள் கதவுகள். கண்ணுடிகள் உடைந்து நொறுங்கின. தளபாடங்கள் யாவும் தரையில் சிதறின. அதிகமான வீடுகளின் கூரைகள் முற்ருக சேதமடைந்தன.

இதேபோன்று பாங்ஷால் வீதி, கடற்கரை வீதியிலும் 15 வீடுகள் சேதமடைந்தன. நான்கு வீடுகள் தரைமட்டமாகின.

### உயிர்ச்சேதம் இல்லை

இக்குண்டுவீச்சு நடக்கும் போது ஒருசிலரைத் தவிர அப்பகுதி மக்கள் யாவரும் பதுங்கு குழிக்குள் புகுந்துவிட்டனர். அதனுல் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. ஒருசிலருக்குச் சிறு காயங்கள் மட்டும் ஏற்பட்டது. மற்ருெரு குண்டு விழுந்து வெடித்தது. அதிக சேதங்கள் ஏற்படவில்லை

ஹெலி மட்டுமல்ல, விமானங்கள் வந்தாலும் இப்போது நகர மக்கள் பதுங்கு குழிக்குள் சென்றுவிடுகிருர்கள். அதுதான் அவர்களுக்கு ஒரே ஒரு பாதுகாப்பு.

### வீதியில் நின்றதால்

முன்பென்ருல் பொம்பர் வந்தால் வீதியில் நின்று வேடிக்கை பார்ப்பார்கள்.

**கா. யோகநாதன்**

ஆனுல் போர் விமானங்கள் பீப்பாக் குண்டுகளை நேரடியாக இறக்கிவிடுவதால் எவரும் வீதிகளில், வீடுகளில் இருப்பதில்லை. எல்லோருமே பதுங்குகுழியில் தஞ்சமடைந்து விடுகிருர்கள். அதனுல்தான் வீடுகள் சேதமடைகின்றன. மக்கள் உயிர் தப்புகின்றனர். ஆனுல் கடந்த சனிக்கிழமை மாலை விமானம் வந்தபோது வீதியில் சென்றபடியால்தான் 6 பேர் பலியானுர்கள்.

கோட்டையில் உள்ள படையினருக்கு உணவுப் பொட்டலம் போட வந்த விமானங்களில் ஒன்றே கடந்த வெள்ளிக்கிழமை பீப்பாக் குண்டுகளைக் குடிசனப் பகுதியில் வீசி வீடுகளைத் தகர்க்கச் செய்துள்ளது.

கடந்த மாதம் 25ம் தேதிக்கு முன்னர் கோட்டையைச் சுற்றிய பகுதிகளில் மட்டும் தான் பொம்பர், ஹெலி தாக்குதல்கள் நடந்தன.

மக்கள் நெருக்கமாக வாழும் குடிசனப்பகுதிகளில் குண்டு வீசப்படவில்லை. ஆனுல் 25ம் தேதி காலையில் முதன் முதலாக வீடுகள், கடைகள் மீது குண்டுகள் வீசப்பட்டன.

அன்று அநேகர் பதுங்கு குழிகளுக்கு செல்லவில்லை. குடிமனைப்பகுதிகளில் குண்டு விழாது என்ற நம்பிக்கையில் இருந்தார்கள். ஆனுல் அவ்ரோ விமானங்கள் அடுத்தடுத்து வீடுகள் மீது குண்டுகளை வீசி தாக்கின,

அச்சமயம் அவ் வீடுகளில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக தப்பிக்கொண்டார்கள்.

காங்கேசன் துறையில்வீதியில் ஒருவீட்டின் முன்பகுதிபிளாட்டின்கீழ் வீட்டுத்தலைவரும், மனைவியும் இரு குழந்தைகளும் பதுங்கியிருந்தனர். காலியாக இருந்த அடுத்த வீட்டின் மீது குண்டு விழுந்தது. இரு வீடுகளும் பலத்த சேதமடைந்தது எவருக்கும் காயமேற்படவில்லை.

• கச்சேரிப் பகுதியில் ஒரு அமெரிக்கன் பாஷன் வீடு. 1958-ல் கட்டப்பட்ட இந்த வீட்டிற்கு அந்நேரம் ஐந்து பேர்வரை இருந்தனர். போர் விமானம் போட்ட குண்டு மாமரம், மதிலில் விழுந்து வெடித்து சிதறி வீட்டையும் கூரையையும் பிய்த்தெறிந்து விட்டது. எவருக்கும் காயமேற்படவில்லை.

காங்கேசன்துறை வீதியில் மற்றும் சில வீடுகள் அன்றைய தினம் குண்டு வீச்சினுல் சேதமடைந்தது. எவருக்கும் காயமேற்படவுல்லை.

### கல்லூரி சேதம்

யாழ். இந்து மகளிர் கல்லூரிகட்டடங்களும் நூற்றுக்கு மேற்பட்ட கடைகளும், ஆலயங்களும் சேதமடைந்தன. எவரும் காயமடையவில்லை.

இந்த குண்டு சம்பவத்தின் பின் மக்கள் பதுங்குகுழியை நாடத் தொடங்கினுர்கள். வீட்டுக்கு வீடு பதுங்குகுழி வெட்டுவதில் துரிதமாக ஈடுபட்டனர்.

### இரண்டாவது தடவை

இதன் பின் ஜூன் 29ம் திகதி பிற்பகல் இரண்டாவது தடவையாக யுத்த விமானங்கள் யாழ். நகர்மீது பலத்த தாக்குதலை நடத்தின.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி கட்டடங்கள், தேசிய சேமிப்பு வங்கி, மக்கள்வங்கி கட்டங்கள் மற்றும் 1ம், 2ம், 3ம்,4ம்,5ம்குறுக்கு தெருவிலும் சுமார் 50 வீடுகள் சேதமடைந்தன.

### மூன்றுமாடி கட்டடிம்

பிரதான வீதியிலுள்ள 'கன்ரபியா' மூன்று மாடிக்கட்டடம், பீப்பா குண்டு வீச்சுக்கு தாக்குப்பிடிக்கமுடியாமல் பின்பக்கம் முற்ருக தரையில் இறங்கியிருந்தது.

1ம் குறுக்குத் தெருவிலுள்ள மார்பு சிகிச்சை நிலையம், வீடுகள் நட்புறவுச்சங்க கட்டடம் முற்ருக சேதமடைந்தன.

யாழ். நகரின் பிரதான குடிநீர் குழாய்மீது குண்டு வீசப்பட்டதால் 1ம் குறுக்குத் தெருவில்உள்ளகுழியில் பாரிய சேதம் ஏற்பட்டு தண்ணீர் பீறிட்டு வெளியேறியது.

பிரதான வீதியில் தேவாலயம் ஒன்று சேதமடைந்தது. மற்றும் பல கடைகள் வீடுகள் சேதமடைந்தன. இக்கட்டடங்களில் மக்கள் எவரும் தங்கியிருக்காததினுல் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.

### 3-வது தடவை

இதன் பின்னர், ஜூலை 2-ம் திகதி நண்பகல் மீண்டும் யாழ். நகர்மீது யுக்த விமானங்கள் குண்டுவீசித் தாக்கின.

யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு எதிரில், கஸ்தூரியார் வீதியில் ஒரு பெரிய வீட்டில் பீப்பா குண்டு விழுந்து வெடித்ததில் வீட்டில் நான்கு பக்கமும் வெடித்து சிதறின. அச்சமயம், வீட்டிலுள்ளவர்கள் குளியல் அறையில் தஞ்சமடைந்து இருந்ததால் காயம் எதுவுமின்றித் தப்பினுர்கள். அருகில் உள்ள மற்றும் சிலவீடுகளும் சேதமடைந்தன. வீட்டுத் தளபாடங்கள் யாவும் சிதறி வெடித்த சின்னுபின்னமாகின.

இதன் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ் நகரில் மீண்டும் யுத்த விமானக் குண்டு வீச்சு நடந்துள்ளது. பின் மறுநாள் சனிமாலையும் விமானத்தாக்குதல் நடந்துள்ளது.

தமிழர் பிரச்சனைக்கு நிரந்தரத்தீர்வு ஏற்படும் வரை யுத்தம் நீடிக்கப்போகிறது.

இதுவரை பதுங்குகுழி இல்லாத வீடுகளில் உடனடியாக பதுங்கு குழிகள் அமைக்கப்படவேண்டும் மாணவர்கள் பொது இடங்களில் பதுங்கு குழிகளை அமைத்து வருகிருர்கள். இவர்களின் யுத்தகால பங்களிப்புகளில், பதுங்குகுழி அமைப்பதும் ஒன்ருகும்.

ஹெலியோ, பொம்மரோ, அவ்ரோவோ எந்த விமானம் வந்தாலும், வீடுகளிலும், வீதிகளிலும், நின்று வேடிக்கை பார்க்காமல் மக்கள் பதுங்கு குழிகளுக்கு சென்றுவிடவேண்டும். இன்று பதுங்குகுழி ஒன்று மட்டும்தான் மக்களுக்கு பாதுகாப்பானது.

# இராசி பலன்

**17-07-1990**

**செவ்வாய்க்கிழமை**

தசமி: மு.இ 8 53 வரை பரணி: பி. ப. 1 32 வரை சித்தயோகம், கார்த்திகை விரதம், ராகுகாலம்: மாலை 3.00முதல்4 30 வரை நல்ல நேரம்: காலை 10.30 முதல் 12.00 வரை.

மேஷம்: பெரியோர் சந்திப்பு, கருத்து ஒற்றுமை, பணவரவு, நண்பருதவி.

இடபம்: கடும் உழைப்பு, தொழில் பாதிப்பு, அலைச்சல் மிகுதி, மனச்சுமை.

மிதுனம்: சகோதர நன்மை, தூரத்து செய்தி, விருந்துபசாரம், விவேகமான செயல்.

கடகம்: அறிஞர் பாராட்டு, தொழில் வாய்ப்பு, மனநிறைவு, ஆலய தரிசனம்.

சிங்கம்: குளப்பமடைதல், வைத்தியசெலவு, எதிர்பாராத உறவு, காரியதடை.

கன்னி: வயிற்றில் ரோகம், சோம்பல், மக்களால் துன்பம், குறைகேட்டல்.

துலாம்: காரிய வெற்றி, பயனுள்ள செய்கை, தொழில் முயற்சி, குடும்ப மகிழ்ச்சி.

விருச்சிகம்: மனமாற்றம், குடும்பசுகம், காரிய பலிதம், பயணங்களால் நன்மை.

தனுசு: மனக்கவலை, பொருள் நஷ்டம், ஏமாற்றம், நண்பர்களால் நன்மை.

தனுசு: மனக்கவலை, பொருள் நஷ்டம். ஏமாற்றம்,

(4-ம் பக்கம் பார்க்க)

## இடபத்திற்கு சுயமுயற்சியால் நன்மை!

# மிதுனத்திற்கு குடும்பத்தில் முன்னேற்றம்!

**வியாழ மாற்றம்**

**ராசி பலன்கள்**

**அங்கம் - 6**

**ஜோஸ்யர் எழுதுவது**

குருபகவான் ஒரு ராசியில் ஒரு ஆண்டு தங்கி தன் கடமையைச் செய்கிருர். ராசிச் சக்கரத்தைக் கடக்க பன்னிரெண்டு ஆண்டுகளாகின்றன. இதையே மகாமகம் அல்லது மாமாங்கம் என்று கூறுகிருர்கள்

கோசாத்தில் 1, 3, 4, 8, 10, 12ம் இடங்களில் குரு சஞ்சரித்தால் அது வேதையாகும். ஜாதகத்தில் குரு கெட்டிருந்தாலோ குரூரமானவராக இருந்தாலோ, கோசாரப்படி கெட்டவரானுலோ, குருவுக்கு சாந்தி செய்வது நலம். வியாழன் தோறும் விரதம் இருந்து அவரைப் பூஜித்து வந்தால் நல்லபலன் ஏற்படும். மணமாகாதவர்க்கு மணமாகும். மக்கள் செல்வம் பெருகும். புகழ் ஓங்கும்.

குரு பகவான் ஆண்கிரகம்; உருவம்—நீள்சதுரம்; அதிதேவதை தட்சணுமூர்த்தி; ஆலயம்— சுவாமி மலை; ஆட்சி வீடு மீனம்; உச்சவீடு-கடகம்; நீசவீடு-மகரம்; மூல திரிகோண வீடு—தனுசு; பகை வீடுகள்—இடபம்: மிதுனம்; துலாம்; காரகன்—புத்திரன், தனம்; திசை-வடக்கு. தானியம்-பச்சைக்கொத்து கடலை; உலோகம்-தங்கம்; மலர் முல்லை; நவரத்தினம் – புஸ்பராகம்; சமித்து – அரசு; மனைதாரை; குலம்-அந்தணன்; விலங்கு-யானை; காரகம்-புனர்பூசம்; விசாகம்; பூரட்டாதி; கிழமை வியாழன்; நட்புக்கிரகம்-சூரியன், சந்திரன் செவ்வாய்; பகை-புதன்; சமம் சனி, ராகு, கேது; திசாகாலம் குருதிசை பதினுறு ஆண்டுகள்.

இனி ராசிவாரியாக பலன்களை நோக்குவோம்.

## இடபம்

(கார்த்திகை 2ம் பாதம் முதல் ரோகினி, மிருகசீரிடம் 2ம் பாதம்வரை)

குருபகவான் இடபராசியினருக்கு மூன்றும் வீட்டில் அமர்ந்து சப்தம, பாக்கியம், லாபம் ஆகிய இடங்களைப் பார்ப்பதால் பொதுவாக சுகம், ஜீவனம், தாரம், நட்பு இவை சம்பந்தமான எதையும் தன் முயற்சியினுல் செய்ய வேண்டியிருக்கும். திருமணத்தை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு வாய்க்கும் கணவர் அல்லது மனைவி நல்ல குணத்தையுடையவராகஇருப்பார். தொழில் முயற்சிகளில் லாபம்கிட்டும். பெற்ருேருடன் சில மனத்தாங்கல் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நிர்ப்பந்தங்கள் காரணமாக வேலைகளில் கஸ்டங்கள் அமைந்து மனவருத்தம் அடையவெண்டிவரும். குடும்ப வாழ்க்கையில் குறைபாடுகள் நிலவும். செலவினங்கள் அதிகரிக்கும்.

குருபகவானின் ஐந்தாவது பார்வையால் இந்த ராசிக்கு ஏழாம் (சப்தமம்) இடத்தைப் பார்ப்பதால் அனுபவிப்பதற்கு நல்ல வாய்ப்புக்கள் உருவாகும். எதிலும் திறமை நிறைந்து காணப்படும். ஆதாயங்களில் முன்னேற்றம்காணப்படும். சிலருக்கு வேலைவாய்ப்புக் கிட்டும்.

குருபகவான் ஏழாவது பார்வையால் இந்த ராசிக்கு ஒன்பதாம் ஸ்தானத்தைப் (பாக்கியம்) பார்ப்பதால் வியாபார துறைகளில் தொழிலாளர் ஒத்துழைப்பு கிட்டும். மேல் இடத்து செல்வாக்கு பெருகும். விவசாய துறையினர் அதிக ஆதாயம் அடைவர். உடன் பிறந்தோரின் உதவியுண்டு. கலைத்துறையினர் ஏமாற்றமும் நஸ்டமும் அடைவர்.

குருபகவானின்ஒன்பதாவது பார்வையில் இந்த ராசிக்கு லாப ஸ்தானத்தைப் பார்ப்பதால், வருமானவரி, நீதிமன்ற துறை, உணவுத்துறை, சமயத் துறை சார்ந்தோர் ஏற்றம் பெறுவர் வாகன வசதியும், மனைவி மூலம் குடியிருப்பு சம்பந்தமான குறைபாடுகளும் நிகழலாம். பதவி உயர்வுகள் சாதகமான முடிவைத்தரும்.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3ம் பாதம் முடிய)

மிதுனராசியினருக்கு குருபகவான் இரண்டாம் இடத்தில் அமர்ந்து ஐந்தாம் பார்வையாக ஆரும் இடமான (சத்துரு ஸ்தானத்தை) பார்ப்பதால் குடும்பத்தில் முன்னேற்றமுண்டு. முயற்சிகள் பலிதமாகும். குடும்ப வாழ்வு சந்தோஸமாக இருக்கும். உல்லாசபயணங்கள்கைகூடும். வியாபாரத் துறையினருக்கு இருந்துவந்த கஷ்டங்கள் நீங்கும்,

நீதித்துறை, உள்ளூராட்சி துறை, அபிவிருத்தித்துறைகளில் கடமையாற்றுபவர்கள் முன்னேற்றமடைவர். அரசாங்க ஊழியர்கள், மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவர். தாய்வழி உறவு அதிகரிக்கும். சொத்துக்களால் லாபமுண்டு, உடல் ஆரோக்கியம் நன்ருக இருக்கும். வைத்தியம், சித்திரதுறையினர் ஏற்றம் பெறுவர் பொருள்வசதி அதிகரிக்கும். பிறரின் எண்ணங்களை அறிந்து சாமர்த்தியமாக செயல் படுவீர்கள்.

குருபகவான் ஏழாவது பார்வையாக இந்தராசிக்கு எட்டாம் இடத்தைப் பார்ப்பதால் உத்தியோக வாய்ப்பு முயற்சிகளில் வெற்றியடையலாம், சகோதர ஒற்றுமை நிலைக்கும். தொழில் வாய்ப்புக்களில் கண்ணியமான பங்காளி கிடைப்பர், கல்வித்

(4-ம் பக்கம் பாரிக்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க. பொ. த. [உயர்தர] பரீட்சை:

# ஒத்திவைக்காவிட்டால் பகிஷ்கரிக்க மாணவர் முடிவு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரச படையினர் மேற்கொண்டு வரும் தாக்குதலினுல் மாணவர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அகதிகளாகவும் இடம்பெயர்ந்துள்ளனர் என்பதனைக் காரணம் காட்டி தமிழ்பேசும் மாணவர் ஒன்றியம் ஆவணி 10:ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் க. பொ. த. உயர்தர பரீட்சையை ஒத்திவைக்க வேண்டும் என்றும் அவ்வாறு செய்யாவிட்டால் இப் பரீட்சையை பகிஷ்கரிக்கப்போவதாகவும் அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர்.

இதுதொடர்பாக மேற்படி மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''தமிழ் மாணவர் கோரிக்கைக்கு சகல மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலை அதிபர்களும் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் மற்றும் பொதுஸ்தாபனங்களின் ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம்.

* கல்வி உளவியல் சார்பானது. ஆகையால் இந்த சூழ்நிலையில் மாணவர்கள் பரீட்சை எழுத முடியாது இருப்பதுடன் இலங்கை அரசு மாணவர்கள் என்று இருக்கும் போது விமான, ஷெல் தாக்குகளை நடத்தி பெருமளவில் அழிக்கப்படலாம் இன்று பாடசாலை, வைத்தியசாலை, பயணிகளை, அப்பாவிகள் என்று தெரிந்து கொண்டே விமானத் தாக்குதல் மேற்கொள்வது. இவ்வாறன இன அழிப்பு நடைபெறுவதை உறுதிப்படுத்தப்படுகின்றது.

பாடசாலைகள் யாவும் அகதி முகாம்களாக்கப்படுகின்றது. அரசின் இராணுவ நடவடிக்கையால் வடக்குக் கிழக்கில் பாடசாலைகளில் பாடத்திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை.

எரிபொருள் தட்டுப்பாட்டால் போக்குவரத்து தடைப்பட்டிருக்கின்றது. யுத்தப் பிரகடனமும், பொருளாதாரத் தடையும் ஒரு பிரதேசத்தில் மேற்கொண்டு அப்பகுதியில் பரீட்சை நடாத்தி சர்வதேச சமுகத்திற்கு சுமூகமான வாழ்க்கை நடைபெறுகின்றது என்பதனை எடுத்துக்காட்ட முனையும் இலங்கை அரசின் முகமூடிகளை கிழித்தெறிய வேண்டும்.

இராணுவ முகாம்களில் அல்லது அதன் சூழலில் பரீட்சை நடாத்தி மாணவர்களை பணயமாக்கிக் கொண்டு இலங்கை இராணுவம் முகாம்களில் இருந்து வெளியேறுவதற்கு திட்டமிடப்பட்டு இருக்கின்றது.

மாணவர்களாகிய நாம் இன்றைய சூழ்நிலையில் சிந்தித்து செயற்பட வேண்டியது தவிர்க்கமுடியாது. எமது நடவடிக்கைகள் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை பலப்படுத்த வேண்டுமே தவிர பலவீனப்படுத்த துணைபோகக் கூடாது.

### வல்லையில் பொம்மர் தாக்குதல்

(வடமராட்சி)

வல்லை ஊரிக்காட்டு பகுதியில் கடந்த 14-ம் திகதி இரவு பொம்மர் தாக்குதல் நடைபெற்றது.

இத்தாக்குதலினுல் ஊரிக்காடு, மயிலியதனை பகுதியிலுள்ள பொதுமக்களின் பல வீடுகளும் கம்பர்மலை பொன்கந்தையா சனசமூக நிலையமும் சேதமடைந்துள்ளன.

(51)

### வடமராட்சியில்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சிக் கடற்பகுதியில் பாரிய யுத்தக் கப்பலொன்று முற்றாக மூழ்கடிக்கப்பட்டதை அடுத்து இப்பகுதிகளிலிருந்து பீரங்கிக் கப்பல்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்டுள்ளன.

தற்போது காரைநகர், மாதகல் கடற்பகுதியில் இக்கப்பல்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

## இப்படியும் நடக்கிறது

திரு. லலித் அத்துலத்முதலி முன்னர் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்தபோது வடக்கு-கிழக்கு மாகாணத்தாக்குதல்கள் பற்றி தினம் தினம் புதுப்புது அறிக்கைகள் வெளியிடுவார்.

''அமைச்சர் அத்துலத் முதலியின் அறிக்கைகளைப் படிப்பவர்களுக்கு விசர்தான் வரும்'' என்று அன்று பொதுவாக மக்கள் பேசிக்கொள்வார்கள்.

இதே மாதிரித்தான் அன்று ஜே. ஆரும்.

'மனோகரா' திரைப்படத்தில் காக்கா ராதா கிருஷ்ணன் ஒரு கட்டத்தில், ''போரில் இரண்டு விதம் உண்டு. ஒன்று உண்மையான போர். மற்றையது வைக்கோல் போர்...'' ஞாபகம் வருகிறது.

அன்றைய ஜனாதிபதி ஜே. ஆரும் தினம் தினம் (காலை ஒன்று, மாலை வேறு ஒன்று மாதிரி) அறிக்கைகள் விடுவார். படிப்பதற்கு ஒரு மாதிரி இருக்கும். அவரும் தான் சொன்னார்: ''போர் என்றால் போர். சமாதானம் என்றால் சமாதானம்...''

இன்று அமைச்சர் ரஞ்சன் ஒன்றுக்கு ஒன்று முரணைக் கூறுவதைக் கேட்டால்... சிங்களவர்களும் சிரிப்பார்கள்! அது சரி... ஜனாதிபதி இன்று என்ன சொல்கிறார்? அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே இனிமேல் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதென்றால் மூன்றாம் பேராக சர்வதேச சமுதாயமும் இடம்பெறவேண்டும் என்று ஜனாதிபதி கூறியிருந்தது உங்களுக்கும் நினைவிருக்கலாம். அந்த மை காய்வதற்குள் இன்றுவேறு மாதிரிக் கூறுகின்றார்!

''தற்போதைய நெருக்கடி, நாட்டின் உள்விவகாரம். வெளியார் தலையீட்டை அனுமதிக்க மாட்டோம்'' என்று 'பச்சை' யாக ஜனாதிபதி தெரிவித்து விட்டார்!

''தமிழ்ப்போராளிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசுவெல்ல முடியாது. வடக்கு-கிழக்கு மாகாணப் பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவர ஒரேவழி அரசியல் தீர்வு ஒன்றுதான்'' என்று கிழக்கு மாகாணத்துக்கு இன்று பொறுப்பாக இருக்கும் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டி சில்வா ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இதே கருத்தைத்தான் முன்னர் கிழக்கில் இருந்தவரும் இன்று வடக்குக்குப் பொறுப்பாக இருப்பவருமான மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ வெளியிட்டிருந்தார்.

இது மட்டுமா? இராணுவப் படையிலுள்ள மூன்று இராணுவ அதிகாரிகளும் கூட அரசியல் தீர்வையே வற்புறுத்தி கருத்துவெளியிட்டுள்ளனர்!

படையினருக்கு; மன்னிக்கவும் படைத்தளபதிகளுக்கு உண்மைநிலை விளங்குகிறது. கண்ணைக் கட்டிக் கொண்டு கிணற்றில் பாய்வதென்றாலும் பரவாயில்லை: கண்ணைத் திறந்துகொண்டு பாயச்சொன்னால்......

படைத்தளபதிகளுக்கு உண்மை விளங்குகிறது. ஆட்சியாளருக்குத்தான் மயக்கமாக இருக்கிறது. ஆட்சியாளர்களின் அகக்கண்களை படைத்தளபதிகள்தான் திறக்கவேண்டும்!

'ஊடுருவி'

## பலாலி, மயிலிட்டி, காங்கேசனில்

# 22 ப.நோ. கூ. சங்க கிளைகள் மூடப்பட்டது!

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 22 கிளைகள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கையாலும், மக்கள் இடம்பெயர்ந்தமையாலும் பலாலி, மயிலிட்டி, காங்கேசன் துறை ஆகிய பகுதிகளில் இயங்கிய மேற்படி ப. நோ. சங்கத்தின் 22 கிளைகளை மூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இக்கிளைகளில் 6 கிளைகளில் உள்ள பொருட்களை எடுக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிவாரணப் பொருள் விநியோகத்தை இலகுவாக மேற்கொள்ள தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற் கருகாமையில் இரு கிளைகள் மேற்படி சங்கத்தால் புதிதாக திறக்கப்பட்டுள்ளது. (86)

### இராசிபலன்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நண்பர்களால்தொல்லை:

மகரம்: கடும்போக்கு, அதிகாரிகள் சினம், வீண்யோசனை, பணக்கஷ்டம்.

கும்பம்: தப்பபிப்பிராயம், அயலவர் நேசம், வேலையாள் சகாயம், புகழ்.

மீனம்: பிறருக்கு உதவி, திருமண யோகம், நல்லோர் சந்திப்பு, தொழில் சிறப்பு.

—ஜோஸ்யர்

### இடபத்திற்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துறையில் புதியபட்டங்கள் கிட்டும், குழந்தைப்பாக்கியம் இல்லாதோருக்கு அதற்கான பாக்கியம் கிட்டும், மனைவி மூலமான சொத்து சேர்க்கையுண்டு. பிரயாணங்கள் நல்ல முடிவைத்தரும்.

குருபகவான் ஒன்பதாவது பார்வையால் இந்தராசிக்கு பத்தாம் இடத்தை (ஜீவனம்) பாப்பதால், அரசியல் துறையினருக்கும், கல்வித்துறை சாந்தவர்களுக்கும் முன்னேற்றம் கிட்டும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணங்கள்கைகூடும் பொருளாதாரதுறை அபிவிருத்தி காணப்படுவதுடன் ஓரளவு சேமிப்பும் கிட்டும். தீர்த்த யாத்திரை திட்டமிட்டபடி அனுகூலமாகும்.

(மிகுதி நாளை)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஜூலை மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

### கடும் தாக்குதல்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகவே இப்படைப்பிரிவு அனுப்பப்பட்டுள்ளது என்றும் ஹெலிகொப்டர்கள், விமானங்களின் துணையுடன் ஒருங்கிணைந்த கடும் தாக்குதல்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(அ)

### தமிழ் மாணவர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொடிகாமம் சந்தையிலிருந்து காலை 8-00 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் கண்டிவீதி வழியாக சாவகச்சேரி வரை நடைபெறும்.

ஊர்வலத்தின் இறுதியில் சாவகச்சேரி சந்தை மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

தென்மராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ரஞ்சன் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தென்மராட்சியில் உள்ள சகல பாடசாலைகளினதும், தனியார் கல்வி நிலையங்களினதும் மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(107)

### சிவில் நிர்வாக இணைப்பதிகாரி

(திருமலை)

திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் சிவில் நிர்வாக இணைப்பதிகாரியாக துறைமுக கப்பல் அமைச்சின் செயலாளர் திரு. ரி. கே. திஸநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

(அ)

### இந்தியா செல்வதற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்களிலுள்ள மக்களே இவ்வாறு தங்கியுள்ளனர்.

தெருவோரங்களிலும் மர நிழல்களிலும்இருக்கும் இவர்களின்நிலை பரிதாபமாக இருக்கிறது.

காலையில் எழுந்தால் தினமும் கடற்கரையை நோக்கி பார்த்து படகு வருமா என்று ஏங்கியவண்ணமுள்ளார்கள்.

இப்பகுதியில் தங்கியுள்ளவர்களின் அதிகரிப்பால் உணவுப் பொருள்களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை பேசாலையில் யில் இன்னமும் பத்தாயிரத் திற்கு மதிகமான மக்கள் இந்தியா செல்வதற்கு காத் திருக்கிறார்கள்.

கடந்த 10-ம் திகதி வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற யுத்தக்கப்பல் மீதான தாக்குதலைத் தொடர்ந்து அன்று இந்தியா சென்ற ஒன்பது படகுகள் மன்னார் கடற்பகுதியில் வைத்து கடற்படையினரால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் என படகுகளில் சென்ற பலர் தெரிவித்துள்ளனர். இதனால் இந்தியா செல்லும் படகுகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

### இராணுவ தரப்பில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எதிர்நோக்கவேண்டிய நிலையிலுள்ளனர். இப்பகுதிகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் மருந்துவகைகளையும் அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அந்த ஏஜென்ஸி செய்தி [ஆஸ்திரேலியா வானொலி] தெரிவித்துள்ளது.

இந்த யுத்தத்தில் 150 ற்கும் மேறபட்ட விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

### மன்னாரில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லும் ஷெல் தாக்குதல்களினாலும் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து எருக்கலம்பிட்டி, விடத்தல் தீவு, நானாட்டான், பேசாலை, திருக்கேதீஸ்வரம் ஆகிய இடங்களில் அதிமாக தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களுக்கு இதுவரையில் 3 நாட்கள் மாத்திரம் உணவு வழங்கப்பட்டதாகவும் அதன் பிற்பாடு எவ்வித உணவுப் பொருட்களும் வழங்கப்படவில்லையாம். உணவுப்பொருட்கள் கையிருப்பில் இல்லையென அங்குள்ள அரச உயரதிகாரிகள் கைவிரித்துள்ளனராம்.

இதனால் அங்குள்ள மக்கள் தமது வீட்டிலுள்ள ஓடுகளைக் கழற்றி 1 ரூபாவீதமும், கொங்கிறீட் கற்களை 50 சதவீதமாகவும், 1பைக்கெட்சீமெந்து 40 ரூபாவாகவும், 1 பவுண் நகை 500 ரூபா முதல் 1000 ரூபா வரை பேரம்பேசி விற்று பணம்திரட்டி இந்தியாவுக்கு செல்கின்றனா என்றும் கூறப்படுகிறது.

(71)

### அகதிகளை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளார்.

பெருந்தொகையினராக பாரதத்துக்கு வந்து குவிந்து கொண்டிருக்கும் அகதிகள் வருகையைத் தடுத்தும் நோக்குடன் இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து பலரைக் கொன்று குவித்துள்ளதுடன் படகுகளையும மூழ்கடித்துள்ளனர்.

தமிழகம் வந்துள்ள அகதிகளில் 3132 பேர் தென் ஆற்காடு மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்தில் 2282 பேரும், மதுரை மாவட்டத்தில் 1934 பேரும் தங்கவைத்துள்ளனர்.

### புலிகள் தாக்கி ஹெலிகள் சேதம்

(கொழும்பு)

யாழ். கோட்டை முகாமுக்குள் முடங்கிக் கிடக்கும் 200 அரச-படையினருக்கு உணவு பொட்டலங்கள் போட முயன்ற ஹெலிக்கப்டர்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில், இரண்டு ஹெலிக்கொப்டர்கள் சேதம் அடைந்துள்ளதாக கொழும்பு இராணுவ தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org